[29th October 1957

(*d*) whether it is a fact that the Police authorities were asked to collect the fine levied from such of the Socialist Party members also who preferred imprisonment to payment of fine; and

(*e*) if so, the number of such cases and the amount so collected?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 917.

(*b*) Yes.

(*c*) 35.

(*d*) Yes.

(*e*) 129 cases, but the collection of fine has been made only in three cases, the amount collected being Rs. 60. One hundred and twenty-six cases are pending realization of fines.

* 30-A. *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of Socialist satyagrahis arrested so far in the State; and

(*b*) the number convicted and the number let off?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The following is the number of volunteers arrested in connexion with the agitation launched by the Socialist Party in this State :—

August 1957	917
September 1957	362
October 1957 (up to 11th October 1957)	14
Total ...	1,293

(*b*) All the 1,293 volunteers who were arrested were convicted.

SRI S. PAKKIRISWAMI PILLAI : *சாத்வீக தோரணையில் சத்தியாக்கிரஹம் செய்யும் சோஷலிஸ்டுத் தொண்டர்களை செக்ஷன் 151-ஆவதின் கீழ் அரஸ்டு பண்ணுவதற்குக் காரணம் என்ன ?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : *சாத்வீக முறையில் இயக்கத்தை நடத்துவது என்றாலும் எந்த எந்த சட்டத்திற்கு விரோதமாக நடந்து கொள்கிறார்களோ அந்த அந்த சட்டத்தை மீறிய குற்றத்திற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளத்தான்படும். இவ்வாறு சத்தியாக்கிரகம் செய்ய முன் வரும் கட்சித் தொண்டர்கள் சிறைக்குச் செல்ல வேண்டுமென்ற கட்டுப்பாட்டுக்கு உட்பட்டே அதில் வந்து கலந்து கொள்ளுகிறார்கள். அதில் சிறைக்குச் செல்ல முடியாதவர்கள் கட்சித் தலைமையைக் கூட இழக்க நேர்ந்திருக்கிறது என்பது அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும்.*

SRI M. KALYANASUNDARAM : *அவர்கள் கட்சி எதை எதிர்க்கிறது ? இவர்கள் என்ன சட்டத்தை மீறினார்கள் ? எதற்காக இப்படி ஆயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட நேர்ந்திருக்கிறது ?*

29th October 1957]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நூற்றுக்கணக்காக இருந்தாலும், ஆயிரக்கணக்காக இருந்தாலும் எத்தனை பேர் சட்டத்தை மீறுகிறார்களோ அவர்கள் பேரிலெல்லாம் நடவடிக்கை எடுக்கத்தான் வேண்டி இருக்கிறது. எந்த எந்த குற்றத்திற்காக நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது என்கிற விவரம் வேண்டுமென்றால் தனியாகக் கேள்வி போட்டால் பதில் அளிக்கிறேன்.

SRI K. R. NALLASIVAM : சோஷலிஸ்டுக் கட்சி நடத்துகின்ற இந்த இயக்கத்தின் கீழ் சென்னைச் சிறையிலிருந்து 14-ந் தேதி விடுதலை செய்யப்பட்ட தொண்டர்கள் பலருக்கு வாரண்டு கொடுக்கப்படவில்லை என்று சர்க்காருக்கு ரிப்போர்ட் வந்ததா ? அதன்மேல் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி தகவல் ஒன்றும் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் நான் பதில் அளிக் கிறேன்.

SRI S. LAZAR : சோஷலிஸ்டுக் கட்சி நடத்தும் இந்தப் போராட் டத்தை மக்களுக்குப் பயன் தரக்கூடிய ஒரு ஆக்க வேலையாக அரசாங்கம் கருதுகிறதா ? அல்லது ஒரு அழிப்பு வேலையாகக் கருதுகிறதா என்பதை அறிய ஆசைப்படுகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எந்த எந்தக் கட்சி கள் எந்த எந்த நோக்கத்திற்காக, லட்சியத்திற்காக சில முறைகளைக் கையாளுகின்றார்களோ அந்த அந்த முறைகளைப் பற்றி சர்க்கார் எந்த விதமான அபிப்பிராயமும் தெரிவிக்கத் தயாராய் இல்லை.

SRI K. ANBAZHAGAN : தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்க ஆர்வம் கொண்டுள்ள இந்த சர்க்கார் இந்த மாநிலத்திற்கு தமிழ் நாடு என்று பெயர் வைக்க மறுப்பதால் தான் இம்மாதிரி போராட்டங்கள் ஏற் படுகின்றன என்று அரசாங்கம் உணருமா ?

MR. SPEAKER : சபை முன்னிருக்கும் கேள்விக்கும் அங்கத்தினர் கேட்பதற்கும் சம்பந்தம் இல்லை.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : போராட்டம் நடத்து கின்ற மற்ற அரசியல் கட்சிக்காரர்களுக்கு இருக்கும் தமிழ் ஆர்வத்தைவிட காங்கிரஸ் கட்சிக்கு அதிக ஆர்வம் இருக்கிறது என்று சொல்ல விரும்பு கிறேன்.

SRI M. C. MUTHUKUMARASWAMY : அகிம்சாவாதியாக இருந் தாலும் இம்சாவாதியாக இருந்தாலும் கோர்ட்டில் மாஜிஸ்ட்ரேட் தீர்ப்பு அளிக்கும்போது, குற்றவாளிகளுக்கு சிறை தண்டனை அளிக்கும்போது சிலருக்கு முதல் வகுப்பும், சிலருக்கு இரண்டாம் வகுப்பும் கொடுக்கிறார் கள். இம்மாதிரி உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பாகுபாடு இருப்பதை அகற்றுவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : வெகுகாலமாக சிற்சில பாகுபாடுகள் அனுசரிக்கப்பட்டு வருகின்றன.

MR. SPEAKER : அடுத்த கேள்வி.

SRI K. R. NALLASIVAM : பாயிண்ட் ஆப் ஆர்டர். தமிழ் நாடு என்று சென்னை மாநிலத்திற்கு பெயர் வைக்கவேண்டும் என்று சோஷ லிஸ்ட் கட்சி தான் அதிக சிரத்தை உள்ளதாக இருக்கிறது. என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

MR. SPEAKER : அந்தக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. உப கேள்வியைக் கேட்க சந்தர்ப்பம் ஏற்படுத்துவதற்கு பாய்ண்ட் ஆப் ஆர்டர் கேட்பது அவ்வளவு நியாயமாக இல்லை.